# மண்ணும் மரபும்



கு. அழகிரிசாமி
ஜெயகாந்தன்
கி. ராஜநாராயணன்

ஜெயமோகன்



## கு. அழகிரிசாமி :


### களங்கமின்மையின் படைப்பெழுச்சி

இலக்கியப் படைப்புகளைத் தீர்மானிக்கும் மிக அடிப்படையான ஓர் அம்சம் குறித்து தமிழில் விமரிசகர்கள் பேசியதேயில்லை. இலக்கியம் கண்டிப்பாக ஓர் அறிவுத்துறைதான். அதில் பெரும் வெற்றிகளை ஈட்டிய பேரிலக்கியவாதிகள் பேரறிஞர்களும்கூட. ஆனால் 'கொடைமடம்' போல 'படைப்புமடம்' என்ற ஒன்று உண்டு. ஒருவிதமான களங்கமின்மை, குழந்தைத்தன்மை, அப்பாவித்தனம் என்று இதை நாம் கூறலாம். இந்த அம்சம் பேரறிவுடன் விசித்திரமான முறையில் இணைந்திருப்பதை நாம் பேரிலக்கியங்களைப் படிக்கும்போது அறிகிறோம். உணர்ச்சி நிலைகளின் உச்சத்தில் ஒற்றைப்படையாக உலகை வகுத்து விடுதல் என்ற 'மடத்து'க்கு ஆளாகாத உலகப் படைப்பாளிகள் எவரும் இல்லை. ஆகவேதான் ஓர் இலக்கியப் படைப்பின் தரிசனம் இலக்கியப் படைப்புக்குள் மட்டுமே செல்லுபடியாகக்கூடியது. அதற்குப் புறவயமான ஆய்வுமதிப்பு இல்லை, தர்க்கபூர்வமான தத்துவ மதிப்பும் இல்லை என்று முக்கியமான விமரிசகர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இலட்சியவாதங்களிலும் பெரும் கனவுகளிலும் தங்களை மறந்து தோயும் போதுதான் பேரிலக்கியநிலை கைகூடுகிறது. யதார்த்தமாகப் பார்த்தால் அதுவும் மடமைதான். அனைத்தையும்விட முக்கியமான மடமை உலகையே தன்முன் நிறுத்திக்கொண்டு வரலாற்றில் தன் காலகட்டத்தின் குரலாகத் தன்னை உருவகித்துக்கொண்டு 'கேளடா மானுடா' என்று பேசுவது. அது மடமை. ஆனால் பேரிலக்கியவாதியின் சுய உணர்வு அதுதான்.

உலகமெங்கும் நவீனத்துவ இலக்கியம் உருவாக்கிய எதிர்மறை விளைவு இலக்கியப் படைப்பாளியை அவனது மடமையை உணரச் செய்ததுதான். நவீனத்துவப் படைப்பாளிகளின் தாரக மந்திரமாக இருந்தது 'சமநிலை'தான். உணர்ச்சிகளில், வெளிப்பாடுகளில், பார்வையில். சமநிலையை நிலைநிறுத்தும் விசை பொதுப்புத்தியிலிருந்து உருவாவது. ஆகவேதான் நவீனத்துவப் படைப்பாளிகளிடம் லௌகீக யதார்த்தம் என்பது முக்கியமான ஒன்றாக உள்ளது.

இலக்கிய முன்னோடிகள் வரிசை - 4

# கு.அழகிரிசாமி
# ஜெயகாந்தன்
# கி.ராஜநாராயணன்



தமிழினி